கீர்த்தனை

ச ம னி னி த ச ச ம னி த ரி
சாமி நீ நாதா சுவாமிநாதரே

நிலம்.. அதே நிலம், நீரு.. அதே நீரு
என் பொண்ணே..நீ எப்படி வளர்ந்தே உயரமா..?
வானம்.. அதே வானம், காற்று.. அதே காற்று
எங் கண்ணே..நீ எப்படி வளர்ந்தே வாட்டமா?

கம்போஸ்ட் பொண்ணு நான் டிமக்ரான் பொண்ணு
உரம்தின்னி பொண்ணு நான் விஷம்பூசி பொண்ணு
கம்போஸ்ட் கேர்ள் டிமக்ரான் கேர்ள்
ஃபெர்டிலைஸ்டு கேர்ள் பெஸ்டிஸைடு கேர்ள்

ஆஹா என் கழுத்தில் குலுங்குதே தங்கநகைகள் இல்லை இல்ல
என் கழுத்தில் பூத்து குலுங்குதே நெல்மணிகள் ஆமாம் ஆமா
நான் குனிந்து நிமிர்ந்து சாய்ந்து ஆடினால்
உதிராதே நெல்மணிகள்
பெருங் காற்றில் மழையில் நனைஞ்சு பாடினால்
கருக்காதே நெற்கதிர்கள்
ஓகோ என் உடம்பை அழகுச்செய்ய பட்டுச்சேலை இல்லை இல்ல
என் உடம்பை அழகுச்செய்யும் ஆலகால விஷம் ஆமாம் ஆமா
ஊர்ந்து பறந்து என்னை கீச்சி பூச்சி வந்து கடிக்காதே
வெட்டுக்கிளிகள் குருவி தத்தி கத்தி கொத்தி சிதறடிக்காதே

கருக்கு அரிவாள்ல அறுத்து அடிச்சு
குமிச்சு வைய்யுங்கடா டேய் என்னை
கருக்கு அரிவாள்ல அறுத்து அடிச்சு
குமிச்சு வைய்யுங்கடா

நான் பஞ்சம் விரட்ட வந்த உரம்தின்னி பொண்ணு
நான் எதற்கும் அஞ்சாத விஷம்பூசி பொண்ணு

கம்போஸ்ட் பொண்ணு நான் டிமக்ரான் பொண்ணு
உரம்தின்னி பொண்ணு நான் விஷம்பூசி பொண்ணு
கம்போஸ்ட் கேர்ள் டிமக்ரான் கேர்ள்
ஃபெர்டிலைஸ்டு கேர்ள் பெஸ்டிஸைடு கேர்ள்
உங்க உயிர காக்கதான்டா உயரமாய் வளர்ந்தேன்
மக்காள் பசிய போக்கதான்டா வாட்டமா வளர்ந்தேன்

ஏழை மக்காள் பசிய தீர்க்க பஞ்சகாலம் அஞ்சி மறைய
கோதுமையை நெல்மணியை கோபுரமாய் குமிச்சிடுச்சே
உரம் பூச்சி மருந்து திட்டம் உங்க
உரம் பூச்சி மருந்து திட்டம் அது
மணிமேகலை அட்சய பாத்திரம்.

20ம் நூற்றாண்டு பசுமை புரட்சியாளர்
உயர்திரு.Dr.M.S.சுவாமிநாதன் அவர்களை
போற்றி பாடிய கீதம்.

ஊக்கம் : சாது ஜான்சன் -அருள்சந்திரா திருச்சி-25, 25-02-2022